2019 ஜூலை 19] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

50. 1 கோடி ரூபாய் செலவில் தீ விபத்து மற்றும் மீட்புப் பணிகளை வானிலிருந்து கண்காணிக்க 50 ஆளில்லா விமானங்கள் (Drones) வாங்கப்படும்.

15. மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், 1,500 தீயணைப்பு பணியாளர்களுக்கு தற்காப்பு சாதனங்களுடன்கூடிய உடைகள் (Personnel Protective Equipment) 8.54 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

(Providing of Personnel Protective Equipment to 1,500 Fire Personnel at a cost of Rs.8.54 Crore)

51. 8.54 கோடி ரூபாய் செலவில் 1,500 தீயணைப்புபணியாளர்களுக்கு தற்காப்பு சாதனங்களுடன்கூடிய உடைகள் (Personnel Protective Equipment) வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் ஆகிய துறைகளின் மீதான மானியக் கோரிக்கைகளைத் தாக்கல் செய்வதற்கு எனக்கு ஒத்துழைப்பு நல்கிய கூடுதல் தலைமைச் செயலாளர், உள் துறை, காவல் துறை இயக்குநர், எனது செயலாளர்கள் மற்றும் ஏனைய அலுவலர்கள் அனைவருக்கும் இத்தருணத்தில் என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் மானியக் கோரிக்கைகளின்மீதான எனது பதிலுரையில் மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பல்வேறு கேள்விகளுக்கு தகுந்த பதில் கிடைத்திருக்கும் என்று நம்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு அன்போடு கேட்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, சொல்லுங்கள்.

பிற்பகல் 3-45

முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1969, 1989 மற்றும் 2006 ஆகிய மூன்று ஆண்டுகளில் காவலர்களுக்காக ஆணையம் அமைக்கப்பட்டது. அதிலே

[முனைவர் க. பொன்முடி] [2019 ஜூலை 19

அவர்களுடைய கோரிக்கைகளையெல்லாம் நிறைவேற்றுவதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டன. அதுபோல இன்று காவலர்களுக்கு, அமைச்சுப் பணியாளர்களுக்கெல்லாம் பல்வேறு கோரிக்கைகள் இருக்கின்றன. அவற்றை நிறைவேற்றுவதற்காக தாங்கள் மீண்டும் ஒரு காவல் ஆணையத்தை அமைப்பீர்களா என்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4-வது காவல் ஆணையம் ஏற்படுத்துவதற்கு D.G.P.-யிடமிருந்து அரசிற்கு கருத்துரு வந்திருக்கிறது. அது அரசினுடைய பரிசீலனையில் இருக்கின்றது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 22-காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 22-காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.7,645,13,38,000/-, மூலதனக் கணக்கில் ரூ.430,83,69,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.5,00,03,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.